ஸ்ரீ திரிபுரசுந்தரீ ஸமேத ஸ்ரீசந்திரமௌளீசுவராய நம:

ஆர்ய தர்மம்.

अपारयन् बोधयितुं पृथग्जनानसत्प्रवृत्तेष्वपि नासदाचरेत् ।
अशक्नुवन् पीतविषं चिकित्सितुं पिबेद्विषं कः स्वयमप्यबालिशः ॥

தனக்கு ஹிதம் இன்னதெனத்தெரிந்துகொள்ளாத பிராகிருத ஜனங்களின் பரமஹிதத்தைப் போதிக்கமுடியாதவன் அவர்கள் அஸத்கார்யங்களில் பிரவிருத்தித்தபோதிலும் "அவர்கள் நாம்சொல்லும் ஹிதத்தைக் கேழ்க்கவில்லையே! நாம்மாத்திரம் நல்லதைச்செய்வானேன்? எல்லோரும் சேர்ந்துசெய்தாலல்லவா பயன்படும்" என்று தானும் அகாரியத்தைச் செய்துவிடக்கூடாது. விஷம் உட்கொண்டவனைச் சிகித்ஸைசெய்து ஸ்வஸ்தப்படுத்தமுடியாத மூர்க்கனுயில்லாதஎவன்தான் தானும் விஷத்தை உட்கொள்வான்? ஒருவனும் அப்படிச்செய்யமாட்டானல்லவா? அதுபோல் பிராகிருத ஜனங்கள் அகார்யத்தைச் செய்துவிட்டாலும் அவர்களை நல்லவழியில் திருப்பமுடியவில்லையே என்று நல்லவனும் கெட்ட கார்யத்தைச் செய்துவிடக்கூடாது பகுத்தறிவில்லாத ஜனங்கள் நல்லது கெட்டது இன்னதென்று சுயமாகவும் தெரிந்துகொள்ளமாட்டார்கள். பிறர் சொன்னாலும் கேட்டுக்கொள்ளமாட்டார்கள். தோன்றினபடி எல்லாம் செய்துகொண்டிருப்பார்கள். அப்படிச் செய்வதில் தனக்காகட்டும், பிறருக்காகட்டும் அஹிதமாகவே முடியக்கூடிய கார்யங்கள்தான் அதிகமாகயிருக்குமேயன்றி தப்பித்தவறி ஹிதமானகார்யமொன்றுமிருக்காது. ஆனால் அஹிதமென்றுநினைத்து அவர்கள் ஒன்றையும் செய்வது இல்லை. ஹிதமென்றுதான் செய்வார்கள். நினைத்தபடி ஹிதமாகவே முடியவேண்டுமானல் நல்லகார்யமாயல்லவாயிருக்கவேண்டும். ஹிதத்திலாசைகொண்டு கெட்டகார்யத்தைச்செய்தால் ஹிதம் எப்படிவரும், தீர்க்காயுஸ்ஸாய் இருக்கவேண்டுமென்று நினைத்துக்கொண்டு தீவ்ர விஷத்தைச் சாப்பிட்டால் ஜீவித்திருப்பதெங்கே. அப்படித் தெரியாதவர்களை எப்படியாவது நல்லவழியில் திருப்ப ஸாதுக்கள் முயற்சி செய்வார்கள். நியாயாநியாயங்களையும், பிரமாணப்பிரமாணங்களையும், ஹிதாஹிதங்களையும், எடுத்துக்காட்டி கெட்டதை விலக்கி நல்லதையே போதிப்பார்கள். இது ஸாதுக்களின் ஸஹஜதர்மம். அப்படிப் போதித்ததை பாக்கியவான்களாயிருந்தால் ஹிதமென்றே கிரஹித்துக்கொண்டு அவ்வழியேநடந்து க்ஷேமத்தையடைவார்கள். பாக்கியமில்லாதவர்களுக்கு ஹிதோபதேசம் விபரீதஉபதேசமாகப்படும். அதைக் காதுகொடுத்தே கேழ்க்கமாட்டார்கள். ஹிதோபதேசம் செய்கின்றவர்மீது துவேஷப்படுவார்கள். அந்த நிலைமையில் ஹிதோபதேசம்செய்தும் பலிக்கவில்லையே! நல்லதைக் கேட்டும் செய்யவில்லையே! அம்மட்டோடில்லாமல் கெட்ட கார்யத்தையுமல்லவா செய்யத்துணிந்துவிட்டார்கள். அப்படிப் பலபேர்கள் விபரீதகார்யத்தையே பலவிதத்திலும் செய்துவரும்பொழுது நாம் சிலபேர்மாத்திரம் நல்லதையேசெய்துவருவதால் என்ன பயன்படப்போகிறது. ஸமுத்திரத்தில் பெருங்காயம் கரைத்ததுபோலல்லவா பயனற்றதாகும் என்று ஸாதுக்களும் தம் உறுதியிலிருந்து தவறிவிடாமல் நிலைத்திருந்து நல்லகார்யத்தையேசெய்து எல்லோர்களையும் நல்லவழிக்குக்கொண்டு வருவார்களாக.　　சுபம்.　　பத்திராதிபர்.

ஆர்ய தர்மம்.
ப்ரஜாபதி-௵ மாசி-௴ ௨௭-வ

சீர்திருத்த சக்தன் எவன்?

இப்படி பொதுவாகக்கேட்டால் பதில்சொல்ல முடியாது? சீர்திருத்தக்கூடியதைக் குறிப்பிட்டுக் கேட்டால் அதற்குத் தக்கபடி பதில் சொல்வது சரியாகும். நிலங்கள் சீர்திருத்த வேண்டியவையானால் நீண்டகாலம் நிலத்தில் உழைத்துத் தேர்ச்சியடைந்தவன் நிலங்களுக்குத் தக்கவாறு அவைகளைச் சீர்திருத்தச் சக்தனாவான். வீடுகள், மாளிகைகள் சீர்திருத்தவேண்டியவையானால் அந்த வேலைகளில் கைதேர்ந்தவன் அதில் சக்தனாவான். இவைபோல் மற்ற திருத்தவேண்டிய லௌகிக வஸ்துக்களுக்குத் தக்கபடி திருத்தம் செய்பவனை பெரும்பாலும் ஜனங்கள் ஒருவிதமாகத் தெரிந்துகொண்டிருப்பார்கள். அலௌகிக வஸ்துக்கள் சீர்திருத்தக்கூடியவையானால் அதில் மனிதர்களுக்குச் சக்தியில்லை' அலௌகிகவஸ்து சீராகவேயிருக்குமாகையால் சீர்திருத்தவேண்டிய நிலைமையிலிராது. இந்தத் தத்துவம் லௌகிகர்களுக்குத் தெரியாது. தற்காலத்திய சிலர் நன்மைகளையே தீமைகளென்று ப்ரமத்தால் நினைத்துக்கொண்டு அவைகளைச் சீர்திருத்தப் பார்க்கிறார்கள். இதுவும் ஹிதமாய் முடியக்கூடியதில்லை. வர்ணாசிரம தர்மமே ஹிந்து ஸமூகத்திற்குத் தீமையென்று நினைத்து அதைத் திருத்தத் தலையிட்டு அதில் வைதிகர் குறுக்கிடுவதைக்கண்டு ஆத்திரப்பட்டு பத்திரிகைகளில் எழுதுகிறார்கள். பத்திரிகைகளைப் படிப்பவர்களுக்கு இது வெளிப்படை. அதில்:—"ஹிந்து சமூகத்திலுள்ள தீமையைப்போக்க எவ்விதச் சீர்திருத்தம் கொண்டுவந்தபோதிலும் மதத்திற்கே ஆபத்து வந்துவிட்டதென வீண்கூச்சல் போடுவது உலகின் போக்கை அறியாத கல் நெஞ்சம்படைத்த வைதிகர்களின் வழக்கமாகிவிட்டது" என்று தமிழ்நாட்டில் ஒருவர் எழுதியிருக்கி

ருர். ஹிந்து ஸமூகத்திற்கு உண்மையில் தீமையாயுள்ளதைப் போக்க வழிதேடினுல் வைதிகர் வழக்கிட வரமாட்டார். தீமை யில்லாத—நன்மையுள்ளதைத் திருத்த வழிபார்ப்பாராஞல் அதை வைதிகர் மறுப்பது உசிதமே. ஹிந்துக்களுக்கு உண்மையில் சிரேயஸ்ஸாதனமாயுள்ளது வர்ணுசிரமதர்மமென்ற தத்துவம் வைதிகருக்கல்லவா தெரியும். அப்படியிருக்கையில் அதைத் தீமையென்று திருத்தத் தலைப்பட்டால் உண்மையறிந்தவன் வாயை மூடிக்கொண்டிருப்பது உசிதமாகுமா? தர்மத்தைத் திருத்திஞல் அதர்மமாகவே முடியும். அப்பொழுது ஹிந்து மதத்திற்கே ஆபத்துதான் நேரும். அந்த ஆபத்திலிருந்து அதைக் காப்பாற்றவேண்டியதற்காகத்தான் வைதிகர் பாடுபடுவார். அது வீண்கூச்சல் என்பதாக தர்மத் துவேஷிகளுக்குத் தோன்று கிறது. புத்தி மோஹம் கொண்டவன் நல்லதையும் கெட்டதா கவே எண்ணுவான். பகுத்தறிவு இல்லாதவன் பாலகனைப்போலே தன் ஹிதத்தையே தெரிந்துகொள்ளமாட்டான். பாலகனுக்குப் பெரியோர் ஹிதம் சொல்லுவதுபோல் வைதிகர் ஹிதம்சொல்ல வேண்டியது அவசியந்தான். இந்த விஷயத்தில் எத்தனைபேர் கள் எவ்வளவு சொன்னுலும் வைதிகர்கள் பிரமாணத்திலேயே கட்டுப்பட்டு கல்நெஞ்சுக்காரராகத்தானிருப்பார்கள். அப்படி யிருப்பது அவர்களின் உத்தமகுணமேயன்றி வேறில்லை. அங் ஙனமே நீதிநூலும்—

सम्पत्सु महतां चित्तं भवेदुत्पल कोमलम् ।
विपत्सु च महाशैलशिलासंघातकर्कशम् ॥

"ஸம்பத்காலங்களில் மஹான்களுடைய மனது நீலோத்பலமலர் போல் மிருதுவாகவும், ஆபத்காலங்களில் பெரிய மலையின் கெட் டிக் கருங்கல்போல் கடினமாகவுமிருக்கும்" என்று கூறுகின்றது. அப்படி அவர்களது சித்தம் மாறுமலிருப்பது தைவ வசத்தா லன்றி வேறல்ல. உலகின்போக்கை வைதிகர் அறியவில்லையென்று சிலர் சொல்லிக்கொண்டிருக்கிருர்கள். உலகின் போக்கு வைதிக ருக்குத் தெரிவதுபோல் மற்றவருக்குத் தெரியாது. அதனுல் உலகின்போக்கை அறிந்தே அவர்கள் அதற்கு உண்மையில் வேண்டியதைச்செய்ய பிரயத்தனப் படுகிருர்கள். இதைக்கண்டு

சிறுபையன்கள் ஹிதத்தைச் சொல்லும் தாய்தந்தைகளிடம் த்வேஷப்படுவதுபோல் புத்தி மோஹம்கொண்ட பகுத்தறிவில்லாதவர் த்வேஷப்படுவார்கள். சிறுவர்களுக்குத் தாய் தந்தையர்கள் சொன்னது பின்னிட்டுக் குணமாய்த் தோன்றுவதுபோல் இவர்களுக்கும் புத்திமோஹம் விலகிய காலத்தில் வைதிகர் சொல்லுவது குணமாகப்படும். அதனாற்றான் வைதிகரை மற்றவர்கள், மடிஸஞ்சிகளென்றும், வம்புக்காரர்களென்றும், நேருக்கு நேராகப் பேச சக்தியில்லாதவர்களென்றும் இன்னும் பலவிதமான கடுஞ்சொற்களால் வைதுகொண்டே இருந்தாலும், வைதிகர் நெஞ்சு கல்லானபடியால் இந்தப்போலி வார்த்தைகளால் கரைந்து போவதில்லை. உறுதியாயிருந்தே உள்ளதை உள்ளபடி உண்மையாகச் சொல்லிக்கொண்டிருப்பார்கள். அதைக்கேட்டு யாவரும் ஹிதமென்றே கிரஹித்துக்கொள்வார்களாக. சுபம்.

பத்திராதிபர்.

மான்டூகோபநிடதம்.

(159-வது பக்கத் தொடர்ச்சி)

த்வைத மதஸித்தாந்தப் பிரவர்த்தகராகிய மத்வாசாரியாள், இவ் வுபநிஷத்தின் முடிவில் த்வைதத்தை வாஸ்தவமில்லையென்றும், அஞ்ஞானகற்பிதமென்றும், பகவானுடைய ஸாக்ஷாத்காரத்தால் நிவர்த்திக்கத்தக்கதென்றும், அத்வைதமே பாமார்த்தம் என்றும்,ஸ்பஷ்டமாய் அத்வைதவாதத்தை அநுஸரித்திருக்கிறார். அத்வைத வாதமானது ஸாதுவாதமென்று புகழ்ந்தும்பேசியிருக்கிறார். ஸர்வஸம்மதமான அத்வைதத்தை சத்துருவும் மறுக்க முடியாதல்லவா? ஆகவே மாத்வர்களுக்கும், த்வைதங்கற்பிதம், அத்வைதம் ஸ்வாபாவிகமென்று ஸித்தம். இதனால் த்வைதமதானுஸாரிகளில் சிலர் தமது கிரந்தங்களில் "த்வைதம்" ஸத்யம் என்றும், அத்வைதம் அஸத்யமென்றும், வர்ணித்திருப்பது ஸ்ரீமத்வாச்சாரியாளின் அபிப்பிராயத்திற்கு விருத்தமாக, அத்வைதமதத்வேஷத்தால்தான் என்பது நிச்சயம். ஸ்ரீமத்வாசாரியாளும் சிலவிடத்தில்த்வைதவாதத்தை அநுஸரித்திருப்பதும்

அத்வைதமதத்திலதிகத்வேஷமூலமாகபூர்வோத்தாஸத்தர்ப்பவிருத்தந்தான் என்பது வெளிப்படை.

இவர் இவ்வுபநிஷத்தில் அத்வைதவாதத்தை புகழ்ந்துபேசிய வசனங்கள் பின்வருமாறு—

अतो विकल्पः शरीरशंबन्धः, केनाचिदज्ञानादिना कारणेन कल्पितोपि उपदेशान्निवर्तते । अयं सतां वादः । ज्ञाते सति परब्रह्मणिद्वैतं अन्यथाज्ञानं निवर्तते इति ॥

என்று. ஆதலால் மாத்வர்களுக்கும் அத்வைதம் ஸம்மதந்தான் என்று ஸித்தம். ஸ்ரீபகவத்பாதாளுடைய பாஷ்யத்தைப் பலதடவை வாசித்தும், ஆனந்ததீர்த்தாசார்யாளுக்கு த்வைத மதப்பிடிவாதம் விடாமலிருப்பதற்குக் காரணம் புரியவில்லை. அவசரமாக அத்வைதத்தைப் புகழ்ந்தும்பேசுகிறார். இதெற்கெல்லாம் கலிகாலந்தான் காரணம். இனி இக் கலிகாலகோலாஹலத்தை அடக்குவதற்காக, அதனைக் கொஞ்சங்கொஞ்சமாக இப் பத்திரிகைவாயில்லாக பஹிரங்கப்படுத்த முன்வருகிறேன்.

அத்வைதாபிமானி.

ஸ்ரீ நடேசஸ்துதி.

(112வதுபக்கத்தொடர்ச்சி)

बुध्वा सद्गुरुबोधितं श्रुतिशिरस्तत्वं शमाद्यन्विता
मायाकल्पितभेदबुद्धिमखिलां निर्भिद्य पादाब्जयोः ।
स्वात्मानं मुनयोऽर्पयन्ति सुधियस्ते नाथ मोक्षेप्सवः
तस्मादीश समर्पयामि पदयोरात्मानमद्य प्रभो ॥८१॥

ஓ நாதா! ஸதாசார்யர்களாலே உபதேசிக்கப்பட்ட வேதாந்த தத்வார்த்தத்தை அறிந்து மாயையினால் கல்ப்பிக்கப்பட்ட ஸமஸ்தபேத க்ஞானத்தையும் விட்டு சமதமாதி சாந்தி குணங்களோடுகூடிய பண்டிதர்கள் மோக்ஷசுகத்தை அடைய இச்சை உள்ளவர்களாய்க்கொண்டு உம்முடைய சரணகமலங்களில் தங்கள் ஆத்மஸ்வரூபத்தை அர்ப்பணம் செய்கிறார்கள்.

ஆதலால் அந்த மோக்ஷஸுக விருப்பத்தாலே ஓ ஈசனே ஓ ப்ரபோ உம்முடைய சரணகமலங்களில் என்னுடைய ஆத்மாவை இப்பொழுது ஸமர்ப்பணம் செய்கின்றேன். இவ்வாறே அப்பய தீக்ஷிதமஹான்களும் ஆத்மார்ப்பண சிவஸ்தோத்திரத்தில் நிரூபித்திருக்கின்றார்கள்—

अद्यैव त्वत्पदनलिनयोरर्पयाम्यन्तरात्म-
न्नात्मानं मे सहपरिकरैरद्रिकन्याधिनाथ ।
नाहं बोद्धुं तव शिवपदं न क्रियायोगचर्याः
कर्तुं शक्नोम्यनितरगतिः केवलं त्वां प्रपद्ये ॥

सर्वं त्वन्मयमेव विश्वमखिलं सर्वक्रियाकृद्भवान्
भोक्ता सर्वफलप्रदश्च भगवन् सर्वत्र लोके नराः ।
यद्रूपेण भजन्ति भक्तिसहितास्तद्रूपयुक्तः प्रभो
तेषामीप्सितपूरणं प्रकुरुषे तद्देहि मद्वाञ्छितम् ॥८२॥

ஓ ப்ரபோ ஸமஸ்த ப்ரபஞ்சமும் உம்முடைய ஸ்வரூபமே. ஸகல கர்மாக்களையும் நீரே செய்கிறவர், நீரே அனுபவிக்கிறவர். ஓ பகவன் ஸர்வ பலங்களையும் கொடுக்கிறவர் நீரே, ஸமஸ்த ஜகத்திலும் ப்ராணிகள் எந்த ரூபமாக பக்திஸஹிதர்களாகக் கொண்டு உம்மை உபாஸிக்கின்றார்களோ அந்த ரூபத்தோடுகூடிய நீர் அவர்களுடைய இஷ்டபூர்த்தியைச் செய்கிறீர். ஆதலால் என்னுடைய இஷ்டத்தைப் பூர்த்தி செய்யும், இந்த ஸ்துதியினால் கோர்த்தத்தைப் ப்ரகாசித்து இருக்கின்றார்.

ये यथा मां प्रपद्यन्ते तांस्तथैव भजाम्यहम् ।
मम वर्त्मानुवर्तन्ते मनुष्याः पार्थ सर्वशः ॥ 4–11 ॥

எவர்கள் எந்த பலோத்தேசத்தினாலே எந்த ரூபமாக என்னை உபாஸிக்கின்றார்களோ அவர்களை அந்த பலத்தைக் கொடுப்பதினாலே அந்தரூபமாய் இருந்துகொண்டே நான் அனுக்ரஹம் செய்கின்றேன். பூமியில் எந்த தான்யேச்சையினாலே எந்த தான்யத்தை விதைக்கின்றார்களோ அந்த தான்யத்தை அடைவதுபோல மோக்ஷசுகத்தை விரும்பி உபாசிக்கின்றவர்களுக்கு மோக்ஷசுகத்தையும் விஷய சுகங்களை விரும்பி உபாஸிக்கிறவர்களுக்கு விஷயஸுகங்களையும் கொடுக்கின்றேன். எந்த தேவதை

களை உபாஸிக்கிற ஜனங்களும் ஸர்வதேவதாரூபியான என்னையே உபாஸிக்கின்றவர்களாக ஆகின்றார்கள். அத்யாயம் ஒன்பது சுலோகம் இருபத்தி மூன்று—

येऽप्यन्यदेवताभक्ता यजन्ते श्रद्धयान्विताः ।
तेऽपि मामेव कौन्तेय यजन्त्यविधिपूर्वकम् ॥

அன்யதேவதையினிடத்தில் பக்தியுள்ள எவர்கள் சிரத்தையோடு கூடினவர்களாய்க்கொண்டு உபாஸிக்கின்றார்களோ அவர்களும் ஓ அர்ஜுனா அக்ஞான பூர்வகமாக என்னையே உபாஸிக்கின்றார்கள். ஸர்வாத்மகரான என்னை ஸர்வவ்யாபக பிரும்ம ஸ்வரூபமாய் உபாஸியாமல் இந்திராதிகளான தேவஸ்வரூபமாய் உபாஸிப்பதால் அக்ஞான பூர்வமாய் உபாஸிக்கிறார்கள் என்று கூறப்பட்டது.

ईश्वरस्सर्वभूतानम् என்கிற கிரந்தங்களை அனுஸரித்து ஸர்வ தேவதைகளிடத்திலும் ஸகல கல்யாணகுணசம்பன்னரான பரமேச்வர ரூபமாகவே உபாஸிக்கவேணுமென்று கிருஷ்ணபரமாத்மாவின் கருத்து. இவ்வாறே ஆத்மார்ப்பண ஸ்துதியில் அப்பய்ய தீக்ஷித மகான்களும் மூன்றாவது பத்யத்தில் நிரூபித்திருக்கிறார்கள்.

इन्द्रं मित्रं वरुणमनिलं पद्मजं विष्णुमीशं
प्राहुरते ये परमशिव ते मायया मोहितास्त्वाम् ।
एतैःसार्कं सकलमपि यच्छक्तिलेशैस्समाप्तं
सत्वं देव श्रुतिषु विदितश्शंभुरित्यादिदेवः ॥

ஓ பரமசிவா! உம்முடைய மாயையினாலே மோகத்தை அடைந்த ஜனங்கள் பரமேச்வரனான உம்மை இந்திரனாகவும், ஸூர்யனாகவும் வருணனாகவும், வாயுவாகவும், பிரும்மனாகவும், விஷ்ணுவாகவும் ருத்திரனாகவும் சொல்லுகின்றார்கள். இவர்களோடுகூட ஸமஸ்த பிரபஞ்சமும் எந்த உம்முடைய சக்திலேசத்தில் லயத்தை அடைகின்றதோ அப்பேர்க்கொத்த நீர் ஸமஸ்தவேதங்களிலும் சம்பு என்றும் ஆதிதேவர் என்றும் பிரசித்தி பெற்றவர்.

नानायोनिषु यस्य कस्य जननं प्राप्तस्य जन्तोः पुरा
भक्तिर्नाथ पुरातनैश्च सुकृतैः संजायते त्वत्पदे

सोऽयं ज्ञानमुपैति मुक्तिफलदं नान्येन कर्म्मादिना
तस्मात्त्वत्पदभक्तिमद्य सुदृढां मन्मानसस्यावह ॥८३॥

பூர்வம்செய்த பாபவசத்தால் நானாவிதமான யோனிகளில் ஜனித்த எந்த ஜனத்துக்கு பூர்வபுண்ய விசேஷத்தால் உம்முடைய சரணத்தில்பக்தி உண்டாகின்றதோ. அந்த ஜனமானது அந்த பக்தியினால் முக்திபலத்தைத் தருகின்ற திவ்யஞானத்தை அடைகின்றது. அந்யமான கர்மாதிகளால் முக்திபலம் அடையத்தகுந்தது அல்ல, ஆகையால் மிகவும் திருடமான உம்முடைய சரணபக்தியை என்னுடைய மனதுக்கு உண்டுபண்ணும்

कोटिजन्मार्जितैः पुण्यैः शिवे भक्तिः प्रजायते। भक्तिर्ज्ञानाय कल्पते ईश्वरात् ज्ञानमन्विच्छेत् ज्ञानादेवतु कैवल्यं न कर्मणा न प्रजया धनेन त्यागेनैके अमृतत्वमानशुः ।

இத்யாதி சுருதி ஸ்மிருதி வசனங்களால் அநேக ஜன்மஸுகிருதங்களால் சிவபக்தியும் சிவபக்தியால் அத்வைத ஞானமும் ஞானத்தால் கைவல்யமும் கிடைக்கிறது. என்ற கிரமத்தை இந்தஸ்துதியில் நிரூபித்து இருக்கின்றார், (83)

तृष्णा शङ्कर मां जहाति न कदाप्यस्याश्च नैवावधि
स्त्वद्ध्याने विमुखं करोति हृदयं स्वामिन्मदीयं सदा ।
किन्त्वेषा तव सन्निधिं मयि गते क्रुद्धेव दूरं गता
तन्मय्येव सदास्थितिं कुरु यतस्तृष्णा न मां संस्पृशेत् ॥८४॥

ஓ ஸ்வாமின் ஓ சங்கர ஆசையானது ஒருஸமயத்திலும் என்னை விடுகிறதில்லை. அதற்கு எல்லையும் இல்லை, உம்முடைய தியானத்தில் ஹிருதயத்தைப் பராங்முகமாகவும் செய்கிறது, உம்முடைய ஸன்னிதியில் நான் வந்திருக்கும்பொழுது கோபித்த ஸ்திரீபோல் என்னிடமிருந்து தூரம் விலகுகின்றது. ஆகையால் விஷயாசை என்னை அணுகாமல் இருக்கும்படி என்னிடத்திலேயே நீரிருந்து அருள் செய்யும். (84)

पुत्रादिबन्धुजनतानिहिताभिमानः
वित्तातिलोलहृदयस्तव भक्तिमार्गम् ।

यो वा न वेद जननादिविकारभाक् सः
श्रेयः पदं न खलु निन्दति सत्यमेतत् ॥८५॥

புத்ராதி பந்துஜனங்களிடத்தில் அபிமாநத்தையுடையதும் பணத்தை ஸம்பாதிப்பதிலேயே ஆசையுள்ள மநஸ்ஸையுடையதுமான ஜனமானது உம்முடைய பக்திமார்க்கத்தை அறிவதில்லை. ஜனனுதி துக்கங்களை அடைந்துகொண்டு ஒருநாளும் ச்ரேயஸ்ஸையடைகிறதில்லை. ஆகையால் விஷயபோகங்களை வெறுத்து பக்திமார்க்கத்தை அறிந்து ஜன்மவியாதிரகிதமான நித்யச்ரேயஸ்ஸையடையும்படி அருள் செய்யவேணும் என்று தாத்பர்யம்.

(தொடரும்) ராஜாசோமசேகர தீக்ஷிதர்.

ஸாயணபாஷ்ய தூஷணமேன்?

வேதங்களுக்கு அருமையான பாஷ்யம் செய்த ஸ்ரீ ஸாயணுசார்யாளைப்பற்றி ஆர்யஸமாஜியான தயானந்தர் கூறியுள்ள குறைகளைக் குறித்து பின்பு விசாரிப்போம்.

முதலில் வைதிகமதஸ்தர்களாகிய ஒரு சிலர் தற்போது ஷ. பாஷ்யகாரர்மீது கூறும் தோஷங்களைப்பற்றியே சிறிது விசாரிப்போம்.

ஸாயணபாஷ்யத்திற்குமுன் வேதங்களுக்கு பாஷ்யங்கள் கிடையாதா? ஸாயணர் என்ன உபகாரத்தைச் செய்துவிட்டார்? அவரை என் நாம் கொண்டாடவேண்டும் என்று இவ்வாறு சிலர் தங்களது புஸ்தகங்களில் எழுதியிருப்பதுடன் ஸ்ரீஸாயணரைப் பற்றி வெகுவாகத் தூஷித்து எழுதியிருப்பதையும் நாம் பார்க்க நேர்ந்தது. பவஸ்வாமி, ஸ்கந்தஸ்வாமி, பாத்வாஜஸ்வாமி, பட்டபாஸ்கரர் முதலான பல மஹான்கள் அந்தந்த சாகைகளுக்கு பாஷ்யம் எழுதியிருக்கிறுர்களாயினும் அவை சங்கிரகமாகவே எழுதப்பட்டிருக்கின்றன. அந்த பாஷ்யங்களில் ஸாயணபாஷ்யத்தில்போல் பல விசேஷங்களைக் காணமுடியவில்லை. ஸாயணர் ஸகல சாகைகளுக்கும் பாஷ்யம் எழுதியிருப்பதாலும், ஒவ்வொரு மந்திரங்களுக்கும் சாகாந்தரங்களிலுள்ள பிராம்மணங்களின் ஸஹாயத்தைக் கொண்டு அர்த்தம் எழுதுவதாலும் ஆங்காங்கு அவச்யாபேக்ஷிதங்களான கல்பஸூத்திர, வ்யாகரண, நிருக்த,

மீமாம்ஸாதி பல விஷயங்களையும் ஒன்றுசேர்த்து வெளியிடுவதால் அந்த பாஷ்யத்தின் மேன்மை அறிஞனாலும் ஆக்ஷேபிக்கமுடியாததே. ஸாயணருக்கு முந்தியுள்ள பாஷ்யங்களில் இவ்வளவு விஷயங்கள் இருக்கின்றனவா வென்பதை யோஜிக்கவேண்டாமா? ப்ராசீனபாஷ்யங்களை யனுஸரித்தே வெகு விரிவாக ஸாயணர் பாஷ்யம் செய்து உபகரித்திருப்பதை மறுக்கமுடியுமா?

ஸாயணருக்குமுன் பாஷ்யம் கிடையாதாவென்று சொல்லுகிறவர்கள் யோஜனைக் குறைவுடனேயே பேசுகிறார்கள். ஸ்ரீ சங்காருக்குமுன் அத்வைதம் கிடையாதா? ஸ்ரீராமாநுஜருக்கு முன் விசிஷ்டாத்வைதம் கிடையாதா? பாணினிக்குமுன் வ்யாகாணம் கிடையாதா என்று ஒவ்வொரு மதத்திலும் ஒவ்வொரு ஸம்பிரதாயத்திலும் சொல்லிக்கொண்டிருக்கலாமே? ஆனால் உண்மை என்ன? ப்ராசீனத்தில் ஏற்பட்ட கிரந்தங்களை அல்லது கொள்கைகளைப் பின்னிட்டு வருகிற ஆசார்யர்கள் விரிவுபடுத்தியும், தெளிவுபடுத்தியும் அவ்வப்போதுண்டானதும் உண்டாகக்கூடியதுமான பல ஆக்ஷேபங்களைச் சமனப்படுத்தியும் கிரந்தங்கள் செய்து உபகரித்திருப்பதாலல்லவோ அவர்களை இன்றுவரையில் நாம் கொண்டாடுகிறோம்.

ஸ்ரீசங்கரர் தமது முன்னோர்கள் காண்பித்த வழியிலேயே அத்வைதகொள்கையைத் தமது பாஷ்யத்தில் விரிவுபடுத்தினர். ஸ்ரீராமானுஜர் போதாயனருடையவும் பூர்வாசார்யர்களுடையவும் வழியைப் பின்பற்றியே பாஷ்யம் செய்கிறதாகச் சொல்லுகிறார், இதனால் அவர்கள் காலத்திற்கு முன்பே பாஷ்யங்கள் இருப்பதாகத் தெரிவதால் அவர்களுக்கு ஏன் அதிகப்படி கௌரவம் என்று எவராவது கேட்கமுடியுமா?

नाथोपज्ञं प्रवृत्तं बहुभिरुपचितं यामुनेयप्रबन्धैः त्रातं सम्यक्यतीन्द्रैः ।

என்று ஸ்ரீவேதாந்ததேசிகன் ஒவ்வொரு ஆசார்யர்களுடையவும் உபகாரத்தைக் கொண்டாடும் வழியைக் காண்பித்தார். இப்படி ஒப்புக்கொண்டாலல்லது மதத்தலைவர்முதல் நமது ஆசார்யர்கள் வரையிலும் ஒவ்வொருவரையும் "அவர் என்ன உபகாரம் செய்துவிட்டார், அவரை ஏன் கொண்டாடவேண்டும்" என்கிற ஆக்ஷேபத்திற்கு இந்த தூஷகர்களே பதில் சொல்லவேண்டிவரும். இந்த ந்யாயத்தைக்கொண்டே ஸாயணபாஷ்யத்தின் உபகாரத்தை மதிப்

பிட்டுப்பார்த்தால் இவர்களுடைய ஆக்ஷேபம் நிலைநிற்காது. ஸாயணருக்கு முந்தியும் பிந்தியும் அவரைப்போல் வேதங்களுக்கு பாஷ்யம் எழுதுகிறவர்கள் அவதரித்ததில்லை, அவதரிக்கப்போவதுமில்லை. இதை வேதபாஷ்யரஸிகர்கள் நன்கு அறிவார்கள்.

ஸாயணபாஷ்யமானது விசிஷ்டாத்வைதிகளுக்கு விருத்தம் என்கிற வாதமும் துர்வாதமேயாகும். கர்மகாண்டம் பிரும்ம காண்டம் என்ற இருபிரிவுகளின் நிலைமை ஒன்றுக்கொன்று மிகவும் வித்யாஸப்பட்டது. கர்மகாண்டத்தில் யாகாதி கர்மங்கள் சொல்லப்படுகின்றன. அவைகளுக்கு வேண்டிய மந்திரப்ரயோகாதிகளை வேதத்தின் ஒரு பாகமாகிய ப்ராம்மணங்களே ஸ்பஷ்டமாய்விதித்துவிட்டன. போதாக்குறைக்கு பலமஹரிஷிகள் கணக்கற்ற கல்பஸூத்திரங்களைச் செய்து கர்மகாண்டத்தில் ஸந்தேக விபர்யயாதிகள் ஏற்படாமல் பாதுகாத்துவிட்டார்கள். அதனாலேயே கர்மகாண்டத்தைப்பற்றியவரையில் சிறிதுகூட மதபேதங்கள் உண்டாக வழியில்லாமல் போய்விட்டது. அதனாலேயே மூன்று மதஸ்தர்களும் கர்மகாண்டப்ரயோகங்களை ஒரேமாதிரியாகவே அனுஷ்டித்துவருகிறார்கள் என்பது ப்ரஸித்தம். ஆகவே கர்மகாண்டத்தைப்பற்றியவரையில் ஸாயணபாஷ்யமானது எந்த மதத்தினருக்கும் உபாதேயந்தானென்பது நிச்சயம். பிரும்மகாண்டத்தில் சுருதிகளுக்கு அர்த்தம்செய்யும் முறையில் அபிப்ராயபேதம் ஏற்பட்டு வைதிகமதத்திற்குள்ளேயே உள்பிரிவுகள் ஏற்பட்டன. ஸாயணாசார்யர் இவைகளில் ஒன்றைச் சேர்ந்தவராகையால் உபநிஷத்துகளுக்கு அவர்செய்யும்பாஷ்யங்களைக் குறைகூறுவதில் பயனில்லை. கர்மகாண்டத்தைப்பற்றியவரையில் அவருடைய பாஷ்யம் ஸர்வஸம்மதமானதே. அதனாலேயே விசிஷ்டாத்வைதிகளோ வேறு எவரோ கர்மகாண்டங்களுக்கு பாஷ்யம் எழுத முன்வரவில்லை. ப்ராம்மண கல்பஸூத்திரநிருக்த மீமாம்ஸாதிகளை மூலமாகக்கொண்டே ஸாயணர் பாஷ்யம் செய்திருப்பதாலேயே எல்லா ஸம்பிரதாயஸ்தர்களும் அவரது பாஷ்யத்தை நிராக்ஷேபமாக அங்கீகரித்திருக்கிறார்கள். அபிப்ராயபேதமுள்ள உபநிஷத் பாகங்களுக்குமட்டுமே விசிஷ்டாத்வைதி முதலியவர்கள் தனி பாஷ்யம் எழுதிக்கொண்டார்கள். ஆனால் கர்மகாண்டத்தின் அர்த்தம் செய்யும் வழியை ஸ்ரீபாஷ்யகாரர்முதல் எல்லாரும் வெளியிட்டிருக்கின்றனர். அதாவது ஸகல வேதப்ரதிபாத்யமே

பிர்ம்மம். ஆகையால் எங்கு ஜீவனையே குறிப்பிடும் விசேஷணங்களுடன் இந்திராதி பதங்கள் இருக்கின்றனவோ அங்கு இந்திர சரீரமாக இருக்கும் பரமாத்மாவே அர்த்தமென்றும், அவ்விதமில்லாதவிடங்களில் யோகார்த்தத்தினுலேயே பகவான் சொல்லப்படுகிறார் என்பதும் அவர்களின் ப்ரக்ரியையாகும்.

ஸாயணபாஷ்யத்தை வைத்துக்கொண்டே இந்த வழியில் கர்மகாண்டங்களுக்கு அர்த்தம் சொல்லலாம். சிலவிடங்களில் சில பதங்களுக்கு ஸர்வேச்வரன்என்று அர்த்தம்செய்யும் ஸாயண பாஷ்யம் இவ்வித அபிப்ராயத்திற்கு அனுகூலமானது. पवित्रं ते என்பதுபோன்ற மந்திரங்களுக்கு ஸுதர்சனதிபரமாக அர்த்தம் ஸாயணபாஷ்யம் செய்யாததும் விசிஷ்டாத்வைதி விருத்தமாகாது. அவர்களின் மதத்தில் ஸுதர்சனதிவிஷயமாக पवित्रं ते போன்றவைகளுக்கு விநியுக்தவிநியோகமே ஒப்பப்பட்டுள்ளது. ஸாயணபாஷ்யம் முதலில் ஏற்படும் விநியோகத்திற்குத் தகுந்ததாகமட்டும் இருப்பதால் வேறு விதிகளால் ஏற்படும் விநியோகத்தை அனுஸரித்து அந்தந்த மந்திரங்களுக்கு அர்த்தம் சொல்வதை ஸாயணபாஷ்யம் சிறிதும் தடுக்காது.

ப்ரமாணத்தைத் தழுவியே ஸாயணபாஷ்யம் செல்வதால் அதில் அப்பிராமாணிகத்வசங்கைப்பட இடமேயில்லை. இவ்விதம் நாம் கவனித்தால் ஸாயணபாஷ்யம் ஸர்வஸம்மதமானதென்பது தெரியவருவதுடன் விசிஷ்டாத்வைதிகளுக்குச் சிறிதும் விருத்தமானதன்று என்பதும் அறியலாம். यः पूर्व्याय என்ற மந்திரத்தில் सुमज्जानये என்கிற பதத்திற்கு सुष्टुमाद्यन्ती हृष्यन्तीलक्ष्म्याख्या जायायस्य— என்று பாஷ்யம் செய்துள்ளார். இதுபோல் பலவுண்டு. இவ்வித இடங்களைக் கவனித்தால் ஸாயணசார் நிஷ்பக்ஷபாதமாகவே பாஷ்யம் செய்கின்றார் என்பது வெளியாகும். இவ்விதம் வேறுவிதமாக பாஷ்யம் செய்யாமல் ஸ்வாஸமாக பாஷ்யம் செய்ததற்கு அவர்களின் பக்ஷபாதமற்ற அபிப்ராயமே காரணம். விசிஷ்டாத்வைதிகளுடைய மதத்தில் அனுஸரிக்கப்பட்ட வழிக்கு பாஷ்யம் விருத்தமாக இல்லாததால் மதத்தின் பெயரால் ஸாயண பாஷ்யத்தின்மீது பழி சுமத்துவது உசிதமாகாததுடன் அந்த பாஷ்யத்தின் ஆச்சர்யமுறையைக் கண்டு ஆநந்திப்பதும் வேறு ஒருவரும் செய்யாதமுறையில் வைதிகமதத்திற்கு உபகாரம் செய்

திருப்பதால் க்ருதஜ்ஞதையை அநுஸந்தித்து அதைக் கொண்டா டுவதும் எந்த வைதிகருக்கும் உசிதமானதாகும்.

இனி தயாநந்தர் ஸாயண பாஷ்யத்தின் மீது பொதுவாக கூறும் ஆக்ஷேபத்தை ஆராய்வோம்.

தயானந்தர் தனது பாஷ்யத்தை ஆரம்பிக்கவேண்டிவந்த காரணத்தைச்சொல்லுகையில்வேதங்களில் எல்லா பாகங்களாலும் ஸர்வேச்வரனே சொல்லப்படுகையில் கர்மகாண்ட பரமாக பல இடங்களில் ஸாயணர் பாஷ்யம் செய்கிறார், எல்லா சப்தங்களா லேயும் ஈச்வரனே சொல்லப்படுகிறானன்றோ? என்கிறார் இந்த வாதம் வைதிகமதத்தின் உண்மை அபிப்ராயம் அறியப்படாத தால் ஏற்பட்டதே.

கர்மகாண்டங்களிலுள்ள மந்திரங்களின் பிராமணங்களை அனுஸரித்தும் விநியோக வாக்கியங்களையும் அனுஸரித்துமே ஸாயணாசாரியார் பாஷ்யம் செய்கிறார் இவைகளை உதறிவிட்டு பாஷ்யம் செய்வது வைதிகமதத்திற்கழகாகுமோ! கர்ம காண்டங் களிலுள்ள பல மந்திரங்களை யாஸ்கர் சாகபூஷணி,, தைகிடி போன்ற பிரஸித்த நிருக்த மதக்காரர்களும் கர்மாக்களிலுள்ள இந்திரன் முதலான தேவதை விஷயமாகவே நிர்வசனம் செய்து அவைகளுக்கு அர்த்தத்தை வெளியிடுகின்றார்கள். வேதார்த்தத் திற்கு வழிகாட்டிகளாக உள்ள அவர்கள் பிரகாண விநியோகாதி களுக்குத் தகுந்தாப்போலேயே நிர்வசனம் செய்யவேண்டு மென்று நிர்பந்திக்கின்றனர்.

இவ்வித நிர்பந்தங்களுக்குக் கட்டுப்பட்டு பாஷ்யம் செய்யு மவர்களை எவ்விதம் குறைகூறமுடியு மென்பதை ஆலோசிக்க வேண்டும். மந்திரங்களுக்கு கர்மாக்களில் விநியோகம் உண் டென்பதை ஒப்புமிவர் விநியோகாதிகளை அனுஸரித்துச் செய்யப் பட்ட பாஷ்யத்தைச் சிறிதும் தூஷிக்கமுடியாது.

ஒருக்கால் கர்மகாண்ட மந்திரங்களுக்கு அத்யாத்ம பரமாக பாஷ்யம் செய்யப்படவில்லை என்ற அபிப்ராயமும் இருக்கலாம் இங்கு ஸாயணாசார்களுடைய பாவத்தை வெளியிடுவோம் ऋचोअक्षरे என்றது போன்ற ச்ருதிகளை கவனித்தால் ஸகல ச்ருதிகளும் அத்யாத்ம பரமானவை என்று ஏற்படும்.

ஆனல் ப்ராம்மண கல்பஸூத்திர விதிகளையும் ப்ரகாணாதி களையும் கவனித்தால் கர்ம்மபரமாயும் அதன் தேவதை விஷய

றாகவும் சொல்லவேண்டி வருகின்றது. ப்ரகரணாநுகுணமாக அர்த்தம் செய்வதே अधिदेवतं என்று சொல்லப்படுமர்த்தம். இவ்வித அத்யாத்ம பரமான அர்த்தமும் அந்தந்த தேவதா பரமான அர்த்தமும் ஒரேயிடத்தில் சொல்லவேண்டி வருகிறது ஆனால் பல இடங்களில் அத்யாத்ம பரமான அர்த்தம் ஸ்வாரஸமானதாகவில்லை. இந்த அபிப்பிராயங்கொண்டே

एवमुत्तरत्राप्यध्यात्मपरतया योजयितुं शक्यं तथापि स्वरसत्वा-भावात् ग्रन्थविस्तरभयाच्च न लिख्यते ।

என்று ஓர் இடத்தில் சொல்லுகின்றார். ஆகவே எங்கு அத்யாத்ம பரமான அர்த்தம் ஸ்வாரஸமானதாக இருக்கிறதோ அவ்விதவிடங்களிலேயே இரண்டு அர்த்தம் சொல்லவேண்டுமென்பதே பாஷ்யாபிப்ராயம். ஆனால் அத்யாத்மார்த்தம் ஸ்வாரஸமானதாக இல்லாத ச்ருதிகள் எவ்விதம் ப்ரஹ்ம்ம விஷயங்களாகும். எல்லாச் ச்ருதிகளுக்கும் அவச்யாபேக்ஷிதமன்றோ பிரும்மவிஷயத்வம் என்ற சங்கைக்கு

यद्यपीतरभागानां यागादिविषयत्वं तथापि बुद्धिः रुच्युत्पादनद्वारा-वेदनसाधनत्वेन ब्रह्मविषयाभविष्यति ।

என்று இதரபாகங்கள் அத்யாத்ம விஷயங்களாக ஆகுவதையும் நிரூபித்துள்ளார். அத்யாத்ம விஷயமாக கர்ம காண்டத்தை நிரூபிக்காத தோஷம் ஸாயணாசார்யாளைச் சாராது.

அந்த மந்திரங்களின் அர்த்தங்களை நேரில் வெளியிடும் பிரமாணங்கள் கர்மபரமாயும் தேவதாபரமாயும் பல மந்திரங்களின் அர்த்தத்தை வெளியிடுவதால் அவ்வித அர்த்தத்திற்கே முதன்மையான மதிப்பைக்கொடுக்கவேண்டும். யாஸ்கரும் அவ்விதம் தேவதாபரமான அர்த்தத்தை மந்திரங்களுக்கு சொல்லிவிட்டே அத்யாத்மபரமான் பாஷ்யத்தைச் செய்கின்றார். இந்த வழியே ஸாயணர்பாஷ்யத்தின்வழி இங்கு அத்யாத்மபரமாகபாஷ்யத்தைச் செய்யவில்லை. அறியாமையால் கர்மபரமாயும் தேவதாபரமாயும் பாஷ்யத்தைச்செய்துவிட்டார் என்றதயானந்த தூஷணம் நில்லாதது என்பதைக் கவனிக்கவேண்டும்.

இனி அந்த இடங்களில் தயானந்தரது வ்யாக்யான முறையும், ஸாயணபாஷ்யத்தின் வழியையும், ஆராய்ந்து அடுத்த வ்யாஸத்தில்வெளியிடுவோம். ஸ்ரீராமானுஜதாதாசாரியார்.

சிவபக்தி சனியின்பீடையை விலக்கும்.

மனிதர்களின் சுகம், துக்கம், உயர்வு, தாழ்வு, வித்தை, புத்தி, சௌர்யம்முதலிய குணங்களை அறிவிப்பது நவக்கிரகங்கள் ஆகின்றன. அந்த நவக்கிரகங்களில் சூரியபகவானின் புத்திரனாகிய சனைச்சரன் என்ற ஓர் கிரகம் உண்டு. சனியென்று சுருங்கச் சொல்வார்களும் உளர். இச் சனியின் பீடையை மனிதர்கள் அடையாமலிருக்கமுடியாதகாரியமாம். மற்றெல்லா கிரகங்களை விட அனுகூலப்பிரதிகூலங்களைச் செய்வதில் இவனே முதன்மை ஆனவன்.

तुष्टो ददासि राज्यञ्च रुष्टो हरसि वै क्षणात् ।

சனிசந்தோஷித்தானானால் ராஜ்ஜியாதிசுகபோகங்களை அளிப்பான், கோபத்தையடைந்துவிட்டாலோ க்ஷணகாலத்தில் ஸர்வத்தையும் நாசம்செய்தும்விடுவான் என்று சோதிடநூல்கள் கூறுகின்றன.

இச்சனியாவன் ஒரு ராசியில் இரண்டரைவருடம் வீதம் 30-வருஷகாலமாக 12-ராசிகளையும் ஒருதடவை சுற்றிவருவான். இதில் $7\frac{1}{2}$வருட சனிபாதை என்று ஒரு அரிஷ்டமுண்டு. அஃது எவ்விதமெனில் ஒருவன் அச்வதி நக்ஷத்திரத்தில் ஜனித்தால் அவனுக்கு சந்திரன் மேஷராசியில் நிற்பான். அக்காலத்தில் சனியானவன் சுற்றிவரும்போது மேஷராசிக்கு 12-வது ஸ்தானமாகிய மீனராசியிலும் அடுத்த மேடராசியிலும், அதற்கடுத்த விருஷபராசியிலும் ஆகராசி மூன்றுக்கும் சனிவருடம் $7\frac{1}{2}$, இதை ஏழரைநாட்டான்என்கிறார்கள். இந்த ஏழரைநாட்டான் சனியானவன் பல கஷ்டங்களை வெகுவாகச் செய்வானென்றும் அதை நீக்குவதற்கு பற்பல பரிஹாரங்களும் சோதிடநூல்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. இருந்தாலும் வெகுவாக இச் சனிதோஷ நிவர்த்திக்காக அச்வத்த பிரதக்ஷிணம் செய்வது நமது முன்னோர்களின் ஆசாரமுறை. அரசமரத்தடியில் சனிபகவான் உபாசிப்பவர்களுக்கு நற்பயனை அளிக்கக் காத்திருப்பதாகவும், அவரது வாரமாகிய சனிக்கிழமையில் அரசை பிரதக்ஷிணம்செய்தால் அவனது அரிஷ்டங்கள் நீங்குமென்றும் புராணாதிகள் கூறுகின்றன. இச் சனிதோஷத்தால் "நளன்" என்றசந்திரவம்சராஜன் பெண்டு, பிள்ளை, தன, தான்யம், சுகம், போகம், ராஜ்ஜியம், இவைகளை

விட்டு காட்டில் மிக வருத்தமுற்று சனியை உபாசித்து பிறகு அவனது கிருபையால் திரும்பராஜ்ஜியம்பெற்று சுகமாக வஸித்து வந்தான் என்று பாரதம் கூறுகிறது. ஆகையால் இச் சனிதோஷ நிவர்த்திக்குத் தகுந்த வுபாயம் ஒன்று சற்று நாம் ஆலோசிக்கு மளவில் "சிவாராதனம்" மிகவும் முக்கியமென்றுவிளங்குகின்றது. 18-புராணங்களை வரைந்துவைத்த வியாச மஹரிஷி சிவபுராணத் தால் இஃதை ஓர் திவ்விய சரித்திரரூபமாக நன்கு வெளியிட்டி ருப்பதை சற்று கவனிப்போம். தேவர்கள் முன்னாளில் விருத்திரா சுரனால் பீடிக்கப்பட்டவர்களாய்த் தங்களது அஸ்திர சஸ்திரங்களை "ததீசி" முனிவரிடம் வைத்துவிட்டு அசுரனைக் கொல்ல உபாயந் தேட ப்ரும்மலோகம்சென்று பிரும்மதேவனிடம் அசுரவதத்தை உத்தேசித்துக் கேட்டகாலத்தில் பிரும்மதேவன் தேவர்களே "ததீசி" என்ற ரிஷி ஒருவர் பரமசிவனை ஆராதித்துத் தனது சரீர எலும்புகள் வஜ்ஜிர துல்லியமாக வேண்டுமென்று வரம்பெற்றி ருக்கிறார். அவரது எலும்பையாசகம்செய்து வாங்கி வஜ்ஜிராயுதம் செய்து அதனால்அவ்வசுரனைக்கொல்லலாம், அவர் பரமசாம்பவனா னபடியால்இக்காரியத்தில்சிறிதும் யோஜிக்காமல்தனதுஅஸ்தியை தந்துவிடுவார்என்றும் சொல்லியனுப்பினார். இதைக்கேட்டு'தேவே ந்திரன். ததீசி' ரிஷியினாச்ரமம்சென்றுயாசிக்கப்போனபோது சுவர் ச்சை என்ற தனது பத்னியுடன் இருக்கும் ரிஷியைக்கண்டு நமது உத்தேசம் இப்போது அடைய முடியுமோவென்று சந்தே ஹித்து நிற்கவே இதையறிந்த மகானான ரிஷி தனது பத்னியை ஓர் காரியார்த்தமாக சிறிது காலம்வரை வெளிப்போகச்சொல்லி தேவேந்திரனை அழைத்து காரியம் விசாரித்து அவனது இஷ்டம் போலவே பிராணாயாமம்செய்துதனதுபிராணனைத்தியாகம்செய்து திவ்விய தேஜஸ்ஸுடன் பிரும்மலோகம் சென்றார். தேவேந்தி ரனும் அவரது அஸ்தியை எடுத்து விசுவகர்மாவிடம்கொடுத்து வஜ்ஜிராயுதம் செய்ய ஆக்ஞாபித்தான். நிற்க, சிறிது நேரம் சென்று ரிஷிபத்னியான சுவர்சசை தனது ஆசிரமத்தில்வந்து பார்க்கவே பர்த்தாவைக்காணாமலும் அத்துடன் சில துர்நிமித்தங் களையும்கண்டு தபோமஹிமையால் நடந்த சமாசாரங்களை அறிந்து கோபங்கொண்டு தேவர்களே! தங்கள் காரியார்த்தமாக அன்ய துக்கத்தைக் கவனிக்காததால் பசுவாக ஜனியுங்கள் என்று சபித் துவிட்டு, பர்த்தாவுடன் செல்லவேண்டுமெனக்கருதி அக்னி ப்ர

வேசம் செய்ய எண்ணி நிற்கும் காலத்தில் ஓர் அசரீரி வாக்கானது ஹே ஸ்திரீயே! உன் கர்ப்பத்தில் திவ்வியமான சிவ தேஜஸ்ஸு தங்கி இருப்பதால் அக்னி ப்ரவேசம் செய்யாதே என்று சொல்லவே, அவள் இந்த கெர்ப்பத்தை இப்பொழுதே வெளியாக்கிவிடவேண்டுமென்று கருங்கல்லால் வயற்றில் இடித்து கர்ப்பத்தை வெளியாக்கிவிட்டாள். அக்காலத்தில் அந்த கர்ப்பம் திவ்விய தேஜஸ்ஸுடன் பிரகாசிக்கவே அதைச் சமாதானம் செய்துவிட்டு அக்னி ப்ரவேசம்செய்து பர்த்தாவின் லோகத்தை அடைந்தாள்.

இதைக்கண்டிருந்த பிரும்மாதி தேவர்கள் இக்குழந்தை ஸாக்ஷாத் பரமசிவனின் அம்சம் என அறிந்து ஓடோடியும்வந்து 'பிப்பலாதர்' என திருநாமம் சாற்றித்துதித்து ஸ்வஸ்தானம் போனார்கள். பிறகு இந்தக் குழந்தை வெகுகாலம் அரசுமரத்தடியில் உலகக்ஷேமார்த்தமாகத் தவம்புரிந்து வரும்போது பார்வதியின் அம்சமாக அவதரித்தவளும் பத்மா என்ற நாமம் பூண்டவளுமான 'அனரண்ணிய' ராஜகன்னிகையானவள் ஒரு தினத்தில் ஸ்நானம்செய்யவேண்டி அவிடம் வரவே அவளைக்கண்டு பிப்பலாதர் மோஹம்கொண்டு விவாஹம் செய்துகொள்ளக்கருதி ராஜனிடம்சென்று பெண்ணைக்கேட்டார். அவன் ஸம்மதிக்காததைக்கண்டு பெண்ணை தாராதபக்ஷத்தில் சபித்துவிடுவேனென்று சொல்லவே சாபத்திற்குப் பயந்து பெண்ணை விவாஹம்செய்து கொடுத்தான். பிப்பலாதரும் பத்மையை அழைத்துக்கொண்டு தனது ஆச்ரமம் வந்து அவளது நல்லுபசாரங்களைக்கண்டு ஸந்தோஷித்து யௌவன சரீரம்பெற்று வெகுகாலம் அவளுடன்க்ரீடித்து 10-புத்திரர்களையும்பெற்று சுகித்துவரும் காலத்தில் மனிதர்கள் சனிபீடையால் மிகவும் வருந்துவதைக்கண்டு அப்பீடையைவிலக்கி அருள்புரிவதற்காகச் சனிக்குச்சில ஆக்ஞையை பகவானால்நியமனம் செய்துவைத்து நன்மைபெறச் செய்திருப்பதாவது —

षोडशाब्दावधिनृणां जन्मतो न भवेच्च सा ।
तथा च शिवभक्तानां सत्यमेतद्धि मे वचः ॥
अथानादृत्य मद्वाक्यं कुर्यात् पीडां शनिः क्वचित् ।
तेषां नृणां तदा सस्थात् भस्मसान्न हि संशयः ॥

इति तत्भयतस्तातविकृतोपि शनैश्चरः ।
तेषां न कुरुते पीडां कदाचित् ग्रहसत्तमः ॥

பிறந்தது முதல் 16-வது வயதுவரை மனிதர்களுக்கு உனதுபீடை உண்டாகக்கூடாது. அப்படியே சிவபக்தர்களுக்கும் உண்டாகக் கூடாது, இது ஸத்தியமான எனது ஆக்ஞை ஆகும். இம்மாதிரியான எனது வாக்கியத்தை அனுஸரிக்காமல் எப்பொழுதாவது மனிதர்களுக்குப் பீடைசெய்வாயேயானுல் அப்போது பஸ்மமாகப் போய்விடுவாய் இதில் சந்தேகமில்லை என்ற மிகப் பயங்கரமான ஆக்ஞையால் சனியானவன் பீடையைச்செய்யக்கூடியவனுனுலும் சிவபக்தர்களுக்கு ஒருக்காலும் பீடையைச்செய்கிறதில்லை. ஆகையால் சனிபீடையை அடையாமலிருப்பதற்காகசிவபக்திசெய்ய வேண்டுமென ஸித்தமாயிற்று.

शनिपीडाविनाशार्थमेतच्चरितमुत्तमम् ।
यःपठेत् श्रुणुयाद्वापि सर्वान्कामानवाप्नुयात् ॥

சனியின் பீடையை அடையாமலிருப்பதற்காக இந்த உத்தமம் ஆன பிப்பலாத, பத்மா, சரித்திரத்தை எவன் பக்தியுடன் படிக்கிருனே, எவன் சிரத்தையுடன் கேழ்க்கிருனே, அவன் சர்வாபீஷ்டங்களையும் பரமசிவனது அநுக்ரஹத்தால் அடைகிருன் என்று பரமகருணுநிதியான பகவான் அனுக்கிரஹித்திருப்பதால் சனி பீடைக்காக அரசுபிரதக்ஷினம் செய்துவருவதுடன் சிவபக்தியும் பீடா நிவர்த்திக்கு அத்யாவசியமென இச் சரித்திரமூலமாய் விளங்கிற்று. உமாகாந்தன் அருள்புரிவாராக.

சுபம்.

K. S. சங்கரராமசாஸ்திரி.
கொட்டாரக்கரை.

மனுஸ்மிருதி அத்தியாயம்—2.

சில வசனங்கள்.

1, 2. பிராமணன்முதலானவர்காளல்மேற்சொல்லிய ஆசமனம் வலதுகையினுல் பிரம்மதீர்த்தம் என்று சொல்லப்படும் கட்டை, விரல்பக்கத்தால் செய்யப்படவேண்டும், அல்லது பிரஜாபதி தீர்த்

தமென்று சொல்லப்படும் சுண்டு விரலின் அடிப்பக்கத்தால் செய்யப்படவேண்டும்; அல்லது தேவதீர்த்த மென்று செல்லப்படும் விரல்களின் நுனிகளால் செய்யப்படவேண்டும். ஒருபொழுதும் பித்ருக்களுக்கு உரித்தானகட்டைவிரல், ஆள்காட்டிவிரல் இவ்விரண்டிற்கும் மத்திய பாகத்தின் வழியாய் ஆசமனம் செய்யக்கூடாது.

3. முதலில் மூன்றுதடவை மந்திரத்தோடு ஆசமனம்செய்தல். ஜலத்தை சாப்பிடவேண்டும். பிறகு இருதடவை ஜலத்தால் வாயைத் துடைக்கவேண்டும், கடைசியில் ஜலக்கையினல் முகத்துவாரங்களாகிய இந்திரியங்களையும், ஆத்மாயிருக்கும் மார்பையும், சிரஸையும் தொடவேண்டியது.

4. தர்மசாஸ்திரம் தெரிந்தவனும், சுத்தமாயிருக்க ஆசை உள்ளவனுமிருக்கிறவன் தனிப்பிரதேசத்தில் கிழக்கையோ, வடக்கையோ பார்த்துக்கொண்டு உஷ்ணமில்லாமலும், நுரையில்லாமலும் இருக்கும் ஜலத்தை உபயோகித்து கையின் குறித்த தீர்த்தத்தால் எப்பொழுதும் ஆசமனம்செய்யவேண்டும்.

5. த்விஜன் பூணூலையோ அங்கவஸ்திரத்தையோ இடது தோளிலும், வடதுகையின் கீழிலும் தொங்கவிட்டால் உபவீதீ என்றும், வடதுதோளிலும் இடதுகையின் கீழிலும் தொங்கவிட்டால் பிராசீனவீதீ என்றும்,மாலையாகக் கழுத்தில் தொங்கவிட்டால் நிவீதீ என்றும் சொல்லப்படுகிறன்.

6. கேசாந்தம், கோதான்ம். என்கிற ஸம்ஸ்காரம் பிராமணனுக்குப் பதினாறுவயதிலும் க்ஷத்திரியனுக்கு இருபத்திரண்டு வயதிலும், வைசியனுக்கு இருபத்துநான்குவயதிலும், செய்யப்படவேண்டும்.

7. ஸ்திரீகளுக்கு மேற்சொல்விய ஜாதகர்மம் முதலிய ஸம்ஸ்காரங்கள் எல்லாம் அதற்குக் குறிப்பிட்டகாலத்தில் கிரமப்படி சரீர சுத்திக்காக மந்திரமன்னியில் செய்யப்படவேண்டும்.

8. ஸ்திரீகளுக்கு வேதவசனப்படி விவாகமே உபநயநமாகிற ஸம்ஸ்காரம். புருஷனுக்கு உபசாரம்செய்வது குருகுலத்திலிருந்து அத்யயனம் செய்வதற்குஸமானம். புருஷன் கிரு

ஹத்தில் கார்யம்செய்வது ஸமிதாதானம்முதலானஹோமத்துக்குச் சரியாகும். அவர்களுக்குத் தனியான உபநயனமில்லை,

9. உபநயநத்திற்குப் பிறகு குரு. சிஷ்யனுக்கு கால் கை அலம்புவது, ஸ்நாநம், ஆசமனம் முதலியவை காலையிலும், மாலையிலும், சமிதாதானம் ஸந்தியாவந்தனம் எல்லாவற்றையும் கற்பிக்கவேண்டியது.

10. சுத்தவஸ்த்ரம் தரித்துக்கொண்டு சாஸ்த்ரப்படி ஆசமனம்செய்து நமஸ்கார அஞ்சலிபந்தத்தோடு வடக்கு அல்லது கிழக்குமுகமாக இருந்து மனதைவேறுவிஷயத்தில் செலுத்தாமல் படிக்கவிரும்பும் சிஷ்யனுக்குக் கற்பிக்கவேண்டியது.

Rஸ்வாமிநாத அய்யர்.

சிறுவருக்கான சிறுகதைக்கொத்து.

விதுரர்.

1. திருதராஷ்ட்ரன் கண் இல்லாதவனாகப்பிறந்தான். பாண்டுவோ வெளுத்த உடலுள்ளவன். ஆதலால் இவ்விருவரும் ராஜ்யத்தை ஆள ஏற்றவரல்ல. மூன்றாவதாவது ஓர் நல்ல பிள்ளை உண்டாகாதா? என்று ஸத்யவதி ஆசைகொண்டாள். அம்பிகையைத் தைர்யப்படுத்தி இன்னும் ஒருமுறை வ்யாஸருடைய அருளைப்பெறு என்று சொன்னாள். அப்படியே ஆகட்டுமென்றாள் அம்பிகை. ஆனால் வ்யாஸரிடம்போக அவள் விரும்பவில்லை.

2. தனது வேலைக்காரிக்கு தன் நகை புடவை முதலியவைகளைக்கொடுத்தாள். தன்னைப்போல் வேஷம்போட்டு வ்யாஸரிடம் அனுப்பினாள். அவளோ கிடைக்காதபாக்கியம் எனக்குக் கிடைத்தது! என்று வந்த வியாஸரை நன்றாகப் பூஜித்து ஸந்தோஷமாக இருந்தாள். ரிஷி அவளை ஆசீர்வதித்து உனக்கு நல்ல புத்ரன் பிறப்பான். நீ இனி அடிமையாக இராய் என்றார். தாயிடம் இந்த சமாசாரத்தைச் சொல்லி மறைந்தார். தைவச்செயலை மீற எவரால் முடியும்?

3. குருடன் வயிற்றில் குஞ்சரம் பிறந்ததுபோல் சூத்ர பெண்ணுக்கு நல்ல பிள்ளை பிறந்தது. அதன்பெயர் விதுரர். இவர் நீதி தர்மம் முதலியவைகளை நன்கு அறிந்தவர். நல்ல குணமுள்ளவர். சிறந்தபக்தர். பாண்டவர்களுக்குச் சிறந்த நண்பர். திருதராஷ்ட்ரனுக்கும் பாண்டுவுக்கும் உத்தம மந்திரி. க்ருஷ்ணனுக்கு ப்ரியமான பக்தர். இவரைக் கொண்டாடாதவரில்லை. ஏன்? இவர் ஆணிமாண்டவ்யரின் சாபத்தால் விதுரராகப் பிறந்த தர்மதேவர்.

4. மாண்டவ்யர் என்பவர் ஓர் உத்தம முனி. அவர் தீர்த்த யாத்ரை செய்துவந்தார். ஒரு சமயம் ஒரு பட்டணத்திற்கு ஸமீபத்தில் ஓர் ஆச்ரமம் கட்டி அங்கு மௌனியாகத் தவம் செய்தார். ஸமீபத்திலுள்ள கிராமத்தில் திருடர்கள் கொள்ளையிட்டார்கள். அவர்களைத் துறத்திக்கொண்டு காவலாளிகள் ஓடிவந்தனர் திருடர்கள் மாண்டவ்யரின் ஆச்ரமத்தில் திருடிய வஸ்துக்களை வைத்துவிட்டுப் பதுங்கிக்கொண்டார்கள்.

5. காவலாளிகள் ரிஷியைப் பார்த்து திருடனைப் பார்த்தீரா? என்று கேட்டனர். அவர் மௌனமாக இருந்தார். திருடிய பொருள் இவராச்ரமத்திலிருந்தது. இவரோ பேசவில்லை. ஆதலால் இவரும் திருட்டில் ஸம்பந்தப்பட்டவரோ? என்று காவலாளிகள் ஸந்தேஹப்பட்டனர். திருடர்களுடன் இவரையும் அரசனிடங்கொண்டு விட்டனர். அரசன் கவனியாமல் திருடர்களுடன் இவரையும் சூலத்தில் ஏற்றும்படி உத்தரவிட்டான்.

6. மாண்டவ்யர் தவ வலிமையால் ஆஹாரமில்லாமல் கழுவிலிருந்தும் சாகாமலிருந்தார். மஹர்ஷிகளை இங்கே வரும்படி மனதால் நினைத்தார். பக்ஷிரூபங்கொண்டு எல்லா முனிவர்களும் அங்கே வந்தனர். முனிவரே நீர் என்ன குற்றம்செய்து கழுவில் ஏறினீர் என்றார்கள். நான் யாருக்கும் தீங்கு செய்யவில்லை. ஆதலால் எவரும் எனக்குத் தீங்கு செய்யவில்லைஎன்றார் மாண்டவ்யர். தற்செயலாக அரசன் காவலாளி ஒருவன் அங்கு வந்தான்.

7. ரிஷியைப்பார்த்து ஆச்சர்யமடைந்தான். அரசனிடம் ஓடிவந்து இதைச் சொன்னான். அரசன் உடனே மந்திரியுடன்

அங்கு ஓடிவந்தான். முனிவர் காலில் விழுந்தான்' தன் குற்றத்தை மன்னிக்கும்படி வேண்டினான். ரிஷி அவனை மன்னித்தார். சூலத்தைக் கீழே இறக்கினார்கள். அவர் சரீரத்திலிருந்து அதை இழுக்கமுடியவில்லை. ஆதலால் அடியிலிருப்பதை வெட்டிவிட்டார்கள். கழுத்துப்புறமிருக்கும் சூலம் வாவில்லை.

8. அது ஆணிபோலிருந்ததால் புஷ்பக்குடலை மாட்ட அது ரொம்ப ஸௌகர்யமென்று அவர் நினைத்தார். அந்த ஆணி உடலுடன் இருந்ததால் ஆணி மாண்டவ்யர் என்று அவருக்குப்பெயர் உண்டானது. அவர் தபோபலத்தால் எல்லாலோகத்திற்கும் போவது வழக்கம். ஒரு ஸமயம் தர்மதேவதை இருக்கும் நகரத்துக்கு போனார். ஆஸனத்தில் உட்கார்ந்திருக்கும் தர்மரைக் கண்டார்.

9. தர்மர் இவருக்கு ஆஸநம், அர்க்யம், பாத்யம் முதலியவைகளைக் கொடுத்துப்பூஜித்தார். மாண்டவ்யர் குற்றமற்றஎனக்கு ஏன் இந்த கழுவேறும்படி சிக்ஷைகிடைத்தது? என்று கேட்டார். ஸ்வாமின்! தாங்கள் பக்ஷியின் வாலில் ஊசியைக் கோர்த்தீர். வாயில்லா ஜீவனுக்கு நீர்செய்த ஹிம்ஸையால் உமக்கு இந்த சிக்ஷை என்றார். மாண்டவ்யர் நான் எப்பொழுது இதைச் செய்தேன் என்று கேட்டார்:

10. நீர் சிறுவனாக இருக்கும்பொழுது செய்தீர் என்று தர்மர் சொன்னார். பனிரண்டு வயதுவரை குழந்தைகளுக்கு தர்மம் அதர்மம் என்பது தெரியுமா? அதோடு சின்ன குற்றத்திற்குப் பெரிய சிக்ஷை விதிக்கலாமா? ஆகையால் நீர் பூமியில் சூத்ரனாகப் பிறப்பீர் என மாண்டவ்யர் தர்மதேவதையைச் சபித்தார். அவர்தான் விதுரஸ்வாமியாக பிறந்தவர். ஜீவஹிம்ஸையால் வந்த கஷ்டத்தைப் பார்த்தீர்களா? விளையாட்டிற்காகக்கூட எவருக்கும் கஷ்டத்தை உண்டுபண்ணக் கூடாது.

ஸ்ரீவத்ஸ வே. ஸோமதேவசர்மா.

வாரவிருத்தாந்தம்.

நவக்ரஹ ப்ரதிஷ்டை:—23உ தரங்கம்பாடி ஆக்கூர் ஸ்வயம்புநாதஸ்வாமி ஆலயத்தில் உள்ளூர் மிராசுதாரர் ஷ்டி கைங்கர்யம் செய்துவைத்து கும்பாபிஷேகத்தை நடத்தினர், பஞ்சாயத்து கோர்ட்டு மெம்பர் முதலிய பல லௌகிக கௌரவ உத்யோகத்திலுள்ள இந்த தார்மிகர் ஸகல உலகிற்கும் ஹிதமான இக்கைங்கரியம் செய்தது மிகஉயர்ந்த தர்மமாகும். நவக்ரஹ ப்ரஸாதத்தால் இவர் அரோக த்ருடகாத்ராக வாழ்க! பரஸுகமும் பெறுக!

சிவராத்ரி:—5உ சிவராத்ரியை முன்னிட்டு பற்பல க்ஷேத்ரங்களில் பகவானுக்கு விசேஷ அபிஷேகார்ச்சனைகள் நடக்கின்றன. இவ்வுத்ஸவம் ஸ்ரீ காளஹஸ்தியில் மிக சிறப்பாக நடப்பதும் பல பக்தர்கள் அங்கு சென்று தர்சனம் செய்வதும் எல்லோருமறிந்ததே. இவ்வாண்டு ஸ்ரீ காமகோடி பீடாதிபதி ஸ்ரீசங்கராசார்யஸ்வாமிகள் அங்கு அனுக்ரஹம் செய்திருந்தாள். ப்ரத்யக்ஷமாக அசையாமல் வீற்றிருக்கும் லிங்கமூர்த்தியும் அசையும் மூர்த்தியான ஸ்ரீ குருமூர்த்தியும்தக்ஷிண கைலாயத்தில்எவர் கண்ணுக்குத் தர்சனமளிக்கிறதோ அவர்களே பாக்யவான்.

5000 ஏழைகளுக்கன்னதானம்:— சென்னையில் ஸ்ரீராமகிருஷ்ண மடம் ஒன்றிருக்கிறது. அதைச் சார்ந்த இங்கிலீஷ் ஸ்கூல் ஒன்று நடக்கிறது. இங்கு பிள்ளைகளுக்கு உபநிஷத், தேவாரம், ஸதாசாரம், ஸதுபதேசம்முதலியன தக்கபடி நடக்கின்றன. ராமகிருஷ்ணர் பிறந்த தினத்தை உத்தேசித்து வருஷா வருஷம் இவ்வளவு ஏழைகளுக்கு அன்னதானம் நடக்கிறது. இவர்களது ஆசாரத்திலிருந்து நாம் வேறுபட்டாலும் நல்ல கர்மங்களைக் கொண்டாடாமலிருக்க முடியாது.

யார் யமன்? வேதாத்யயநத்தை விடுதல் ஆசாரமில்லாமை ஆலஸ்யம், அந்நதோஷம், இவைகளே ப்ராஹ்மணனைக் கொல்கின்ற எமன் என மநுகூறினர். காரணமின்றியே ப்ராஹ்மணன் வேதாத்யயனம் செய்யவேண்டுமென்றார் ஆபஸ்தம்பர். மூன்று

தலைமுறை அத்யயனம்செய்யாவிடில் அந்தகுலம் சூத்ரகுலமாகும் என்றார் மற்றொருவர். யாரென்னசொன்னாலென்ன? வரவர வைதிகஸந்ததிகூட அவைதிகமாக மாறிவருகிறது. நல்லவேளை யாக நகரங்களில் சில ஆஸ்திகரது முயற்சியால் வேதாத்யயனம் புத்துயிர்பெற்று வருகிறதெனலாம். சென்னைக்கடுத்த வில்லி வாக்கத்தில் ஓர்வேதவகுப்பு காலை-4½மணிமுதல் நடந்துவருகிறது ஆஸ்திகரது முயற்சி போற்றற்கேற்றதே.

லோகோபகாரி வாழ்க! 28உ சென்னை முத்யால்பேட்டை யில் ஓர் கீதோபன்யாஸம் துவக்கப்பட்டது. இதை முன்னின்று ஆரம்பித்தவர் ஸ்ரீமான் வெங்கிட்டராயலு என்ற புஸ்தக வியா பாரி. அவர் தற்காலத்தில்தோன்றிய ராஜீய துக்கம், துர்பிக்ஷம், ஸஹோதர கலஹம் தர்மக்லானி முதலியவைகளை அகற்றவும், உலகம் நமது ஸநாதனதர்மமூலமாக நன்மைபெறவும் ஸ்ரீகீதையே தக்க ஸாதனமென ஓர் பெரியோர் மூலம் கேட்டு தக்க பண்டித ரைக்கொண்டு இதை நடத்த பஜனையுடன் கிருஷ்ணாலயத்திலி ருந்து உபன்யாஸமண்டபத்திற்கு வந்தார். நூற்றுக் கணக் கான ஜனங்கள் கூடினர். முதல் உபன்யாஸம் நடந்தது. முத் யால்பேட்டையில் ப்ராஹ்மணர் அதிகமாகச்சேர்ந்தது இவ்வைப வத்தில்தானெனலாம்.

ஸ்ரீ குருசரணம்போற்றி:—2உ சென்னை ஸ்ரீ சங்கரமடத்தில் மார்க்கண்டேய புராணம் ஆரம்பிக்கப்பட்டது. ஸ்ரீகாமகோடி பீடாதிபதி ஸ்ரீஜகத்குரு பரமாசார்யாள் உத்ஸாகமூட்டி நல்ல கார்யங்களைச் செய்யும்படி தூண்டுவதால் தற்சமயம் மதப்ரசார சாரமான பல கார்யங்கள் நடக்கின்றன. ப்ரபவ வருஷம் முதல் துவக்கி பாகவதம், பாத்மம், ப்ருஹ்மாண்டம் ப்ரஹ்ம வைவர்த் தம் ப்ராஹ்மம் என்ற ஐந்து புராணங்களும் கீதையும் வாஸிஷ்ட மும் உபன்யஸிக்கப்பட்டது. ஸ்ரீகுரு கிருபையால் பதினெட்டு புராணத்தையும் ச்ரவணம்செய்ய பக்தர்கள் அவாக்கொண்டிருக் கின்றனர்.

ஸ்ரீவத்ஸ வே ஸோமதேவசர்மா.